# இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்: தியாகராய நகரில் மண் ஆய்வு தொடங்கியது

**சென்னை, ஏப்4:** இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்தின் ஒருபகுதியாக சென்னை தியாகராய நகரில் மண் ஆய்வு தொடங்கி நடந்து வருகிறது.

சென்னையில் முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிந்து இரண்டுவழித்தடங்களில்மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து, வண்ணாரப்பேட்டை முதல் விம்கோநகர் வரையிலான விரிவாக்கம் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

இதற்கிடையில், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது கட்ட திட்டம்ரூ.79,961 கோடி செலவில் மூன்று வழித்தடங்களில் 118.9 கி.மீ.க்கு ரயில்பாதை அமைக்கப்படவுள்ளது. மாதவரம்-சிறுச்சேரி சிப்காட் (45.8 கி.மீ.); மாதவரம்-சோழிங்கநல்லூர் (47 கி.மீ.), கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி (26.1 கி.மீ.) ஆகிய பாதைகள் இந்தத் திட்டத்தில் அமைக்கப்படவுள்ளன. இதில் கலங்கரை விளக்கத்தில் இருந்து பூந்தமல்லி வரை ஒரு பகுதியாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பாதையில், தியாகராய நகர் வெங்கடநாராயணன் சாலையில் பூமியில் துளையிட்டு மண் ஆய்வு செய்யும் பணி புதன்கிழமை தொடங்கி, நடைபெற்று வருகிறது. மேலும் வடபழனி-பூந்தமல்லி பாதையில் விரிவாக்கத்துக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகவும் மண் ஆய்வு நடைபெறுகிறது. மண் ஆய்வு குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியது: இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்காக பல்வேறு இடங்களில் மண் ஆய்வு நடந்துவருகிறது. இதுவரை 70 சதவீத பணிகள் முடிந்துவிட்டன. கலங்கரைவிளக்கம்-பூந்தமல்லி பாதையின் சில பகுதிகளில் மண் ஆய்வு தொடங்கி நடைபெறுகிறது. இந்த ஆண்டு இறுதிக்கு முன்னதாக எல்லா பணிகள் முடிந்துவிடும் என்றார் அவர்.